இயல் 6

# முடிவுரை

- சங்க காலத்தில் தோன்றத் தொடங்கிய கற்பு எனும் கோட்பாடு காப்பிய காலத்தில் பல உட்கூறுகளைக் கொண்டு வலிமையாக்கப்பட்டது. கரணமொடு புணர்ந்த மண வாழ்க்கையே கற்பாக ஏற்கப்பட்டது. மணத்தின் பின், பெண்ணின் பிறந்தகத் தொடர்பு அருகிப் அற்றே போனமை, கணவன் பரத்தனாக இருப்பினும் மனைவி அவனுக்கே ஆட்பட்டு அடங்கி இருக்க வேண்டியமை, அதேபோது மனைவி கணவனையன்றி வேறு எந்த ஆடவனுக்கும் உடலாலும், உள்ளத்தாலும் இடம் கொடுக்காமை மட்டுமல்லாமல் ஆடவர் பிறரின் எண்ணத்தில் கூடத் தான் இடம் கொடுத்துவிடாத ஐம்புல ஒடுக்கம் கொள்ள வேண்டியமை, மனையினுள்ளேயே அடங்கிக்கிடக்க வேண்டியமை போன்றன கற்புக் கோட்பாட்டின் உட்பண்பு ஆயின.
- சங்க காலத்தில் உருப்பெற்றுக் கொண்டிருந்த தந்தை வழிச் சமுதாயத்தில் கற்பு நெறியைப் பெண்ணுக்குக் கற்பிக்க அருந்ததி கதை மட்டுமே துணையாக இருந்திருக்க, காப்பிய காலத்தில், மற்றும் ஏழு பத்தினியர் கதைகள் உருவாக்கப்பட்டன. அவை, கற்பு எனும் பெயரில், பெண்ணின் அறிவை மழுங்கடித்து, கணவனையே வழிபடுபவளாய், பேதைப் பருவத்திலிருந்தே அவள் வாழ்வு முழுவதும் அவனுக்கே அடிமையாகிடத் துணையாயின.
- மணத்தின் முன்னும், பின்னும் மட்டுமே ஆன பண்பாக, சங்க காலத்தில் வகுக்கப்பட்ட கற்புக் கொள்கை, கணவன் இறப்பின் பின்னும் ஆனதாகக் காப்பிய காலத்தில் விரிவாகி, மூவகைக்கற்பாக வடிவம் பெற்றது. கைம்மைக் கற்பு, பெண் வாழ்வில் அவளுக்கான மகிழ்வு அனைத்தையும் அழித்து, அவளைத் தனிமைப்படுத்தி, சமுதாயத்திலிருந்து அந்நியபடுத்தித் தற்கொலையின் எல்லைக்கே அனுப்பியது.
- அன்று, பெண்ணுக்கு வலியுறுத்தப்பட்ட கற்பு, ஆணுக்கு உரியதாக எள்ளளவும் கருதப்படவில்லை. அதனால், அவனுடைய பொறுப்பின்மை, ஒழுக்கமின்மை, மிகைக் காமம் போன்ற இன்னும் பல குணக்கேடுகளும் பெண்ணின் வாழ்வுக்கு முழுப்பகையாகி,

அது, சமுதாயமே சீர்கேடு அடைய உறுதுணையாயிற்று. ஆக, கற்பு பெண்ணின் மீதான மனித நேயமற்ற கூர்ங்கொடுமையாயிற்று.

- காப்பிய காலத்தில், பெண்ணின் மண வயது பன்னிரண்டுக்கு உள்ளாகவே அமைந்துள்ளது. அவள், வெளி இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப் படவில்லை. ஆடவனின் நுகர்வுக்கு ஏற்ற மென் கலைகளே அவளுக்குக் கற்பிக்கப் பட்டிருந்தன. ஆடவர் எவரையும் காண்பதற்கோ, அவர்களோடு பழகுவதற்கோ பெண்கள் அனுமதிக்கப் படவில்லை. அதனால் தம் வாழ்விற்குத் தக்க துணைவனைத் தேர்ந்தெடுக்க அவர்கள் அறிந்தாரல்லர். காதலிக்கத்தான் உரிமை அல்லது வாய்ப்பு இருந்ததே ஒழிய, அவரது காதல், திருமணத்தில் முடியும் நிலை, அவருடைய தந்தையரையே சார்ந்திருந்தது. காதலித்தவனையே மணப்பது கற்புக் கொள்கையாக, அன்று வளர்ந்து இருந்தமையால் – அவர் தம் தந்தையர், தம் மகள்களால் காதலிக்கப்பட்டவர் நல்லரா, பொல்லரா, ஆற்றல் உள்ளவரா, இல்லாதவரா என்பது பற்றிக் கண்டு கொள்ளவேயில்லை. அல்லது, அத்தகையதொரு சூழல், காப்பியங்களில் பாடுபொருளாக அமையவே இல்லை.
- பெண் ஒருவனுக்குத் திருமண வடிவில், வீரத்திற்குரிய பரிசாகவோ, நன்றிப் பரிசாகவோ வாகைப் பதக்கப் பதிலியாகவோ, நிமித்திகக் கூற்றுக்கு ஏற்பவோ குடும்பத்தில் அவளது பாதுகாப்பிற்குரிய ஆடவரால் தரப் பட்டாள். இது முழுக்க முழுக்க, தந்தை, தனயரின் விருப்பம்வழி நடந்ததே தவிர, பெண்ணின், பெண்ணைப் பெற்றவளின் கருத்துக் கேட்பு அங்குப் பெரும்பாலும் இல்லவே இல்லை.
- திருமணங்கள் ஆண், பெண்ணின் உடல் உள்ளப் பொருத்தங்களை அடிப்படையாகக் கொள்ளாது, மணமக்கள் குடும்பங்களில் பொருந்தியமைகிற பொருள் வளம், செல்வாக்கு முதலியவற்றிற்கு வளமான இணைப்புக்கே உரியனவாகவே அமைந்தன. தம்மை விடக் குலத்திலோ, செல்வத்திலோ உயர்ந்த மருகனைப் பெற, மணமகளின் தந்தை சீர் என்ற பெயரில், பொருள் பலவற்றைக் கொடுக்கும் வழக்கம் காப்பிய காலத்தில் தோன்றியது. இந்தச் சீர், புற மணங்களிலேயே தரப்பட்டது. ஒருவனுக்கு மணம் செய்யப்படும் பெண் அவனை விட உயர் குலத்தாளாய் இருப்பின், அவள் மேல் நிலையைப் புத்தகத்திலும் நிறுவிக் கொள்ளச் சீதனம் துணையாயிற்று.

- காப்பியத் திருமணத்திற்கு ஆங்காங்குக் காரணமாக நிகழ்ந்த காதலில், பொதுவாக நிலையான அல்லது சீரான இயல்பு, காணப்படவில்லை. அக இலக்கியத் துறைகளில், பெண்ணின் சுதந்திரத்திற்குப் பெருஞ்சான்றான உடன் போக்கு, காப்பியங்களில் எங்கும் இடம் பெறவில்லை. காதல் பருவத்தில் வெகு இயற்கையாக் அமையும், இயற்கைப் புணர்ச்சி, காப்பியங்களில் மிகச் செயற்கையாக அமைந்துள்ளது. இது பெண் இயல்பை மலினப்படுத்துவதாகத் தோன்றுகிறது.
- காப்பிய மாந்தரைப் பொருத்த வரை, பொருளியல் உற்பத்தி தொடர்பான பெண்ணின் உழைப்பு காப்பியங்கள் எதிலும் குறிப்பிடப்படவில்லை. பொருளியல் உற்பத்தி என்பது ஆணோடு சம்பந்தப்பட்டது என்றே தோற்றத்தையே இது தருகிறது. பெண்ணிற்குத் தரப்பட்ட கல்வியும் இதனையொட்டியதாகவே அமைகிறது. ஆடவரின் நுகர்வுக்கு ஏற்ப அமையும் கல்வி, அழகு, வயது ஆகிய மூன்று மட்டுமே, பெண்களின் திருமணத் தகுதிகளாக அமைந்திருந்தன. திருமணங்களில், காலம் செல்லச் செல்ல, பெண்களுக்கான சடங்குகள் கூடியுள்ளன. அதன்வழி, கணவனுக்கே ஆட்பட்டவராய், பிற சிந்தனையற்றவராய்ச் சமுதாயத்தில் அமைய உறுதி அவர்கள் செய்யப்பட்டனர்.
- பல பெண்டிர் மணம் மக்களின் பல்வேறு தரங்களில், தளங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டமையைக் காப்பியங்கள் படைத்துக் காட்டுகின்றன. இதற்கு இலக்கான பெண்களே, அதனை எதிர்க்காது மௌனத்தின் ஊடாக அதனை ஏற்றுக் கொண்டமையை நடப்பியலுக்குப் பொருந்தாமல் காப்பியங்கள் சித்திரிக்கின்றன.
- பல பெண்டிர் மணம், ஆடவரின் பல்வேறு, வசதிகளினாலும் பொய்களினாலும் சாதிக்கப்பட்டமையைச் சீவக சிந்தாமணி சித்திரிக்கிறது.
- அறுதிப் பெரும்பான்மையான குடும்பங்களில் கணவனின் மேலாண்மையே மிகுந்திருந்தது. பெண், அங்கு அடிமைச்சியாகவே நிறுத்தப் பட்டமைக்குக் காப்பிய வரிகளே சான்றாகின்றன. கல்வியில், பல்வேறு இடங்களுக்கு இயங்குவதில், தம் அறிவைப் பயன் படுத்துவதில், கணவனின் கருத்தின்படி நடத்தலில் எனப் பல்வேறு வகைகளில் ஆணுக்கு அடுத்த நிலையிலேயே பெண் இயங்கினாள்.
- மனைவியை விட்டுப் பிரிந்திருக்கும் காலம் மிகு நெடிது ஆக அமைந்தமையும் பிரிவுக் காலத்தில் மனைவிக்குத் தெரியாமல், கணவன் பரத்தமையில் ஈடுபட்டமையும், காப்பிய

காலத்தில் தோன்றின. பரத்தமைவயின் பிரிவுக்கால நீட்சியில் கணவன், மனைவி கருவுறுதற்கும் இயலாத அளவிற்கு மனைவியைக் கூடுவது அருகி அவள் குழந்தைப் பேறு அடைவதும் கூட இல்லாமல் போனமையும் காப்பிய காலத்தில் நிகழ்ந்துள்ளன. போர்வயின் பிரிவு, நீண்ட நெடும் மாதங்களாய் ஆன போது, கற்புக் கல்வி தவிர, வேறு கல்வி பெற்றிராத காப்பிய மகளிர் வாழ்வு, அப்போது வெறுமையாய் விரயமாய் அமைந்தது. ஆனால், கணவனோ, மனைவி இருக்கும் போதே பரத்தையர் தொடர்பை மேற்கொண்டான். பொருள்வயின் பிரிவில், மனைவிக்குத் தெரியாமலும் பரத்தையரைக் கூடியமையும், அங்குக் காணக் கிடைக்கின்றது.

- கணவன் மனைவியரிடையே கூடலின் போது, மனைவி, நுகர்வுப் பொருளாகவேயிருந்துள்ளாள். அவர்களிடையே ஊடல் பெரும்பாலும் பரத்தமையை மையமாகக் கொண்டிருக்க, அது தன் தேரா அறிவால் கணவன் கொலை செய்யும் குற்றத்திற்கும் இட்டுச் சென்றுள்ளது.
- மனிதர்கள், ஒருவர் மற்றொருவரைக் காக்க வேண்டியது மனித நேயத்தின் பாற்பட்டது எனினும், கணவன் மனைவியை உரிய நேரத்தில் காப்பதற்கு முயலாமல் இருத்தலையும் காப்பியம் காட்டுகிறது. அதே நேரம், மனைவி கணவனைக் காக்க வேண்டிய சூழல் ஏற்படும் போது அவள் புற உலகக் கல்வியும், அனுபவமும் பெற்றிராத நிலையில் அதனை ஈடேற்ற முடியாது இருந்திருக்கிறாள். அச்சூழல் அவளை இறப்பிற்கும் கூட இட்டு சென்றிருக்கிறது.
- கற்புக் கொள்கையின் படி கணவன் இறந்த சூழலில், மனைவியும் சேர்ந்து சாகும் நிலையை, சமுதாயம் பரிவோடு பார்க்கவில்லை. மாறாக, அதனை உயர்ந்த, நெறியாகப் பாராட்டியது. அந்த மரபினை மீறி தான் வாகிற நிலைப்பாட்டை ஏற்கும் துணிவு அக்காலத்தில் பெண்ணிற்கு இல்லை. அ:றிணை உயிர்கள் கூட, போற்றிப் பேணப்பட்டதைச் சித்திரிக்கும் காப்பிய மரபு, பெண்ணின் உயிர், ஒரு பொருட்டாகக் கருதப்படாமையைக் குற்றமாகவே நினைக்க வில்லை. பெண், குடும்பத்தின் வாரிசைத் தன் கருவில் தாங்கியிருக்கும் போது மட்டுமே, அவளுடைய உயிரைப் பேணுவது ஒரு பொருட்டாக ஏற்கப்பட்டது. கணவன் இறந்தவுடன், மனைவி இறக்கும் அளவிற்குப் போக,

கணவனோ அத்தகைய நிலைக்கு ஆட்படாமல், வாழ்க்கையைத் தொடரும் நிலை மிக இயல்பாக, காப்பிய காலத்தில் அமைந்துள்ளது.

- திருமணமாகாமல் பெண் இருப்பது தவறு என்று சுட்டிக் காட்டும் சமுதாயம், அவளுக்குக் குடும்பத்தில் பாலியல் இன்பம் பெறும் வாய்ப்பு முழுமையாகத் தவிர்க்கப்படும் சூழல் நிகழ்ந்து, அவள் வாழ்க்கை வீணாகும் போது, அதை எவரும் ஒரு பொருட்டாகக் கருதாமையே காப்பிய காலத்தில் அமைந்துள்ளது.
- பரத்தமை, சங்க காலத்திலேயே இருந்திருந்தாலும், காப்பிய காலத்திலேயே அ:்து ஒரு நிறுவனம் ஆயிற்று. எனவே, அப்போது தான், விலை மகளிர்க்கான வாழ்வியல் விதிமுறைகள் விதிக்கப்பட்டன. அவற்றிற்கு ஏற்ப, அறுபத்து நான்கு கலைகளையும் கற்று, மன்னன் முன் அரங்கேறி, அவனது பரிசினைப் பெற்றவளே, தினம் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னை, வருமானமாகப் பெறும் தகுதியைப் பெற்றாள்.
- தம் தொழிலுக்கு மூலதனமாக இருந்த தமது மேனியைப் பேணவும், அதனை அழகுபடுத்தவும் தேவையான பொருட்களை வாங்கப் பரத்தையர் வேறு எவரையும் சார்ந்திருக்கவில்லை. அவற்றைத் தாம் ஈட்டிய வருமானத்தைக் கொண்டோ அல்லது தம்மிடம் வரும் ஆடவரிடம் இருந்து செல்வம் பெற்றோ வாழும் தகுதி பெற்றிருந்தனர். தமக்கென்று பேரில்லங்களையும், தெருக்களையும் கொண்டவர் ஆயினர். அரண்மனை உள்ளிட்ட அனைத்து இடங்களுக்குச் செல்லவும், அரச குல ஆடவரிடம் பேசவும், அன்றைய சமுதாயம் பரத்தையர்க்குச் சலுகை அளித்திருந்தது.
- பரத்தையர், பலருடன் - பலருக்காக - என்றில்லாமல், ஒருவனோடேயே பாலியல் உறவு கொண்டு, ஒழுக்கமான வாழ்வை ஏற்று வாழ்கிற நிலையும் அன்று இருந்திருக்கிறது. அவ்வாறு, வாழ்ந்தவளாகவும், தன் மகள் மணிமேகலைக்கும் பரத்தையர் கல்வியைத் தராமலேயே, அவளைத் துறவு வாழ்வில் சேர்த்தவளாகவும் மாதவி ஒருத்தி மட்டுமே காப்பிய காலத்தில் காட்டப்பட்டுள்ளாள். எனினும், பாலியல் உறவைப் பொறுத்தவரை, மனைவியைத் தவிர, பரத்தையர் எத்தனை பேரையும் ஆண் ஏற்றுக் கொண்டிருக்க - மாதவியைப் போன்ற - ஒருவனையே துணையாகக் கொண்ட பரத்தை குலத்தாளும் கூட - வேற்று ஒருவனை நினைக்காத சூழலிலும் - வேறு ஒருவனை நினைப்பதாகத் தவறாகக் கருதி அவளோடான தனது தொடர்பை முடிவுக்குக் கொணர வைத்தமை பெறப்படுகிறது.

- குலமகளிர்க்குக் கிடைக்காத நிறை கல்வி, ஒப்பனை நலம் பரத்தையருக்குத் கிடைத்தாலும், அவை அனைத்தும் ஆண்களை ஈர்க்கவே பயன்படுத்தப்பட வேண்டியனவாகவே இருந்தன. எனவே, பரத்தையர், வேந்தனுக்கு மகிழ்வு தரும் வித்தகியராகி, செல்வந்தருக்கு நிறைந்த பாலியல் இன்பம் தரும் துணையாகி, மழுங்கடிக்கப்பட்ட ஆளுமையுடன் வாழவே முடிந்தது.
- பரத்தையர் வாழ்வு, இழிவானதாக அமைந்தது. இதற்குச் சமுதாய அமைப்பின் குறைபாடுமே காரணம். ஆனால், குடும்பச் சிதைவுக்கு அவர்களே காரணியாக்கப்பட்டனர். பரத்தையர் எங்கும் நுழைய உரிமை பெற்றிருந்தாலும், அவை அனைத்தும் சமுதாயக் கேடுகளுக்கே துணையாயின, என்று காட்டப்படுகிறது. இழிகாமப் பொருளையே தம் ஐம்புலன்களின் மையப் பொருளாக்கி, அவர் தம் வாழ்வு வெளிப்படையாகக் காப்பியத்தில் ஏற்கத்தகாத தீய ஒழுக்கமாகக் குறிக்கப்பட்டிருப்பினும், அந்தணர்களால், அது சிலப்பதிகாரத்தில் ஊக்குவிக்கப்பட்டமையும் காணப்படுகிறது.
- பரத்தை, தான் ஒருப்படாவிட்டாலும், கழிகாம இழிஞரின் விருப்பிற்கு அவள் இந்தச் சமூக அமைப்பினால் பலியாக்கப்பட்டாள். இத்தகைய சூழலும் காப்பிய காலத்தில் இருந்தமை வெளிப்படுகிறது.
- சங்க காலத்தில் காதலனோடு தவிர, ஒரு கன்னிப்பெண், ஆடவர் பிறரோடு பழகுவது அருகியே காணப்படுகிறது. கன்னியர், தானம் செய்தமையும், திருமணம் செய்யாமல், தன்னிச்சையாக வாழ்ந்தமையும் அன்று இல்லை. தலைவன் அருகில் இல்லாத போது, மனைவி தனியே அறச்செயல்கள் செய்யாமை, கணவன் இறந்தவுடன் மனைவி உடனே இறந்து படுவது அல்லது இறப்புக்கு ஆளாகாத போது, தற்கொலை செய்து கொள்வது, அல்லது கைம்மை எனும் கூர்ங்கொடுமையை ஏற்பது - இது தான் மனைவி செயற்பாலது என வைதீக சமயம் பெண்களைக் கருத்தியல் அளவிலும் சமூக நிலையிலும் வலியுறுத்தியிருக்கிறது. ஆனால், இவைகளில் இருந்து, குறிப்பிட்ட வகைகளில், சமண, பவுத்த சமயங்கள் பெண்களுக்குப் பகுதி விடிவு தந்தன.
- கைம் பெண்கள் சிலர், கைம்மையை விடுத்துத் துறவில் புகவும் அதற்கும் மேலே, தவம் செய்யவும் சமண சமயம் வ ழி வகுத்தது. தவிரவும் பெண் துறவிகள் மக்கள் எவருடனும் பேசுவதற்கும் பண்பில் கீழானவருக்கு அறிவுரை சொல்வதற்கும் உரிமை பெற்றனர்.

கைம்பெண்களில் மற்றோர், அணிகலன்களை நீக்கிக் கைம்மைக் கற்பை ஏற்கவே முனைந்தாலும் சமணம் சார்ந்த மன்னனால் வாழ்வுக்கு அடிப்படையான பொருள் தரப்பெற்று வாழும் வாய்ப்புப் பெற்றனர்.

- கணவனையே தொழவேண்டும் எனும் நிலையை மாற்றி, மணமான பெண்டிர், பவுத்த புத்தனையும், சமண அருகனையும், தொழலாம் என்ற நிலையை முறையே பவுத்த, சமண சமயக் காப்பியங்கள் சித்திரிக்கின்றன.
- பெண் மணம் செய்து கொள்ளாமல் முதிர் கன்னியாக வாழவோ, முதியோர்ள் ஆகும்வரை, தனித்து அவள் வாழவோ முடிவதைக் காப்பியங்கள் காட்டுகின்றன. மேலும், கன்னிப்பெண் தன்னுடைய காதலன் அல்லது மிக நெருங்கிய உறவினனோடு உடனிருந்து தானம் செய்யவோ அதே போல் திருமணமானவள், கணவன் அருகில் இல்லாத போது தானே தானங்கள் செய்யவும் பவுத்தம் அனுமதித்தது.
- ஒழுக்கத்தோடு வாழ விரும்பினாலும், சமுதாயத்தில் அதற்கு அனுமதி கிடைக்காமல் தவித்த பரத்தையர் குல மகளிரை, பவுத்தம் துறவியராக்கிச், சமுதாயத்திற்கு நலம் பல செய்கிறவர்களாகவும் சமயமதி நலன் வாய்க்கப் பெறுபவர்களாகவும் ஆகக் கூடியவர்களாகக் காட்டுகிற பெரும் புரட்சியைச் செய்தது.
- பவுத்த, சமண சமயங்களால் பெண்களுக்கு மேற்குறித்தபடி உரிமைகள் சில கிடைத்தாலும் அவர்களின் சிக்கல்களை நீக்கத் தேவையான முழுமையான தீர்வுகளை அவற்றால் தரமுடியவில்லை.